அமெரிக்க வரி விதிப்பால் திருப்பூர் தவிக்கிறது!

# டிரம்பிடம் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு கண்டு ‘விஸ்வகுரு’ எனும் தங்கள் பட்டப்பெயருக்கு நியாயம் செய்யுங்கள்!

## பிரதமர் மோடிக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, செப்.3-

அமெரிக்க அதிபர் அறிவித்துள்ள வரி விதிப்பினால் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து பிரதமர் மோடிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வலியுறுத்தல் குறித்த சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் கண்டன ஆர்ப்பாட்டம் மாபெரும் வெற்றி!**

**மாண்புமிகு பிரதமர் மோடி அவர்களே!**

**தாங்கள் ஆதரித்த ட்ரம்ப் அவர்கள் விதித்துள்ள #USTariff காரணமாக, தமிழ்நாட்டு இளைஞர்களுக்கும், இந்தியாவின் பல மாநிலத் தொழிலாளர்களுக்கும் வாழ்வளிக்கும் #DollarCity திருப்பூர் தவிக்கிறது.**




**குஜராத்தில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்களுக்கு குறைந்த விலையில் இரஷ்ய கச்சா எண்ணெய் கிடைப்பதற்காக, பல ஆயிரம் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தும் எங்கள் ஏற்றுமதியாளர்களை நீங்கள் பரிதவிக்க விடுவது எந்த விதத்தில் நியாயம்?**



**நான் ஏற்கெனவே, கடிதத்தில் கூறிய நிவாரணங்களை உடனடியாக அறிவித்து, ஆவன செய்யுங்கள்! அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தி, தீர்வுகண்டு, #VishwaGuru எனும் தங்கள் பட்டப் பெயருக்கு நியாயம் செய்யுங்கள்!**

**இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கெடுத்து உணர்வுகளைப் பதிவுசெய்த அனைத்துக்கட்சி தலைவர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் பொதுமக்களுக்கும் நன்றி.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

## அமைச்சர் - மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர் பாபு பயனாளிகளுக்கு உரிய ஆவணம் வழங்கினார்!





சென்னை, செப்.3-

மக்களிடம் செல்; அவர்களோடு வாழ்; அவர்களை நேசி என்ற பேரறிஞர் அண்ணாவின் கொள்கைப் பாதையில் நமது தமிழ்நாடு அரசு மக்களின் மீது கொண்டிருக்கும் அக்கறைக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டாக “உங்களுடன் ஸ்டாலின்” என்ற புதிய திட்டத்தினை முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததால் தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கும், அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள்/திட்டங்களை குறிப்பாக சாதி சான்று பெற, பட்டா மாற்றம் செய்ய, பென்சன் வாங்க, மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் தகுதி வாய்ந்த விடுபட்ட மகளிர் பயன் பெற, மருத்துவ காப்பீட்டு அட்டை பெற, ஆதார் அட்டையில் திருத்தங்கள் செய்ய, ரேசன் அட்டையில் முகவரி திருத்தம் செய்ய” போன்ற பல கோரிக்கைகளுக்கு அரசு அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியமின்றி அலுவலர்கள் நேரடியாக உங்கள் இருப்பிடங்களுக்கு அருகிலேயே வந்து தீர்வுகளை வழங்கும் உன்னத திட்டமான உங்களுடன் ஸ்டாலின் திட்டம் இன்று துறைமுகம் சட்டமன்ற தொகுதியில் மண்டலம் 6 வார்டு77 சென்னை, புளியந்தோப்பு ஓல்ட் ஸ்லாட்டர் சாலையில் உள்ள விளையாட்டு மைதானத்தில் கீழ்பாக்கம் செகரட்டிரியேட் காலனியில் நேற்று (02.09.2025 - செவ்வாய்க்கிழமை) நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு பல்வேறு கோரிக்கைகளுக்காக முகாமில் பங்கேற்ற பயனாளிகளுக்கு குறிப்பாக மின் இணைப்புகளுக்கான நுகர்வோர் பெயர் மாற்றம். 10 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

CMCHIS முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 210 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்..

ஆதார் இணைய சேவைகள் மனு 45 பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களில் பெயரை சேர்க்க மற்றும் திருத்தம் செய்ய கோரி 5 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

சொத்து வரியை மதிப்பிடுவதற்கான விண்ணப்பங்கள் மற்றும் பெயர் மாற்றம் செய்ய கோரி 7 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

பட்டா நில அளவை 32மற்றும் பெயர் மாற்றுதல் 3 பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் (SSS) ஓய்வூதியத் திட்டங்கள் / முதல்வர் மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 140 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

ஆதரவற்ற குழந்தைகளுக்கான உணவுகள் நிதியுதவி திட்டம் 2 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு கண்டும்

மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை/ மாற்றுத்திறனாளிகளுக்கான தனிப்பட்ட அடையாள அட்டை 1 விண்ணப்பம் பெறப்பட்டு தீர்வு கண்டும்

கலைஞர் மகளிர் உரிமை தொகை 714 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு கண்டும்

இதர மனுக்கள் 100 என மொத்தமாக 1708 மனுக்கள் பெறப்பட்டு அதில் 1702 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு அதற்குரிய ஆவணங்களை உரிய பயனாளிகளிடம் வழங்கி சிறப்பித்தார்.

மேலும் இந்நிகழ்வில் பகுதிக் கழகச் செயலாளர் சொ. வேலு, மாமன்ற உறுப்பினர் பு. சுமதி,மண்டல செயல் அலுவலர் பொறியாளர் சரவணன் வட்டக் கழக செயலாளர்கள் வி.அபாய், தி.தயாளன் மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை! மல்லிகா ராமகிருஷ்ணன் எம்.சி. ஏற்பாட்டில்

# காஞ்சிபுரம் 18வது வட்டத்தில் 38 சி.சி.டி.வி. கேமராக்கள்! கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி துவக்கி வைக்கிறார்!

## அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்–ஆர்.காந்தி வாழ்த்துரை!

காஞ்சிபுரம், செப்.3 -

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், காஞ்சிபுரம் மாநகரம் 18 வது வார்டு மாமன்ற உறப்பினர் திருமதி மல்லிகா ராமகிருஷ்ணன் தனது சொந்த செலவில் 18 வது வட்டத்தில் உள்ள அனைத்து வீதிகளில் 38 சி.சி.டி.வி. கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது. இக் கேமராக்களை துவக்கி வைக்கும் விழா இன்று (3.9.2025-புதன்கிழமை) மாலை 6 மணிக்கு காஞ்சிபுரம் பேருந்து நிலையம் அருகில் நடைபெறுகின்றது.

விழாவிற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

மாநகரக் கழகச் செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

கழக மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர் வி.எஸ்.ராமகிருஷ்ணன், 1 வது பகுதிக் கழகச் செயலாளர் கே.திலகர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கேமராக்களை கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி துவக்கி வைக்கிறார். அமைச்சர்கள் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம், ஆர்.காந்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

இந் நிகழ்ச்சியில் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., மேயர் மகாலட்சுமி யுவராஜ் மற்றும் மாநில, மாவட்ட, மாநகர, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகள், மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கொள்கின்றனர்.

மாதவரம் 16வது வட்டம் கன்னியம்மன் கோயில் தெருவில்

# மழை நீர் அகற்றி சாலை சீரமைப்பு!

## புழல் எம், நாராயணன், இ. கண்ணப்பன், நா. மோகன் குமார், வி. சிவபிரகாஷ் பணிகளை துரிதப்படுத்தினார்கள்!

மாதவரம், செப்.3-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதியில் 16 வது வட்டம் கன்னியம்மன் பேட்டை பகுதியில் உள்ள கன்னியம்மன் கோவில் தெருவில் சமீபத்தில் பெய்த மழையின் காரணமாக தேங்கிய மழைநீர் அகற்றப்பட்டு சாலை சீரமைக்கப் பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி 16வது வட்டம் கன்னியம்மன் பேட்டை பகுதியில அமைந்துள்ள கன்னியம்மன் கோயில் தெருவில், சுமார் 25 வீடுகள், சமீபத்தில் பெய்த மழையின் காரணமாக மழை நீர் சூழ்ந்து சாலையில் பொதுமக்கள் நடக்க முடியாத சூழ்நிலை இருந்தது. இதை கன்னியம்மன் பேட்டை பகுதி மக்கள் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் அவரிடத்தில் சீரமைத்து தர வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். பொதுமக்களின் கோரிக்கையை புழல் நாராயணன் அவர்கள் மணலி மண்டல அலுவலர் பொறுப்பு தேவேந்திரன், 16 வது வட்ட செயற்பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் ஆகியோரிடம் மழைநீரை அகற்றிசாலையை சீரமைத்து தரக்கோரி கோரிக்கை வைத்தார்.

அதன்படி பெருநகர சென்னை மாநகராட்சி மணலி மண்டல ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் துரிதகதியில் செயல்பட்டு கன்னியம்மன் கோயில் தெருவுக்கு சென்று பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களை சந்தித்து குறைகளை கேட்டறிந்து சாலையில் வளர்ந்துள்ள முள் புதர்கள், செடி, கொடிகள் ஆகியவற்றை அகற்றினார்கள். பின்னர் பள்ளம் மேடுகளாக இருக்கும் தெருகளில் தற்காலிகமாக ரபிஸ் போட்டு சாலை அமைக்கும் பணியை துவக்கினார்கள். அதன்படி பாப் காட் இயந்திரம் மூலம் ஜல்லி அமைத்து தற்காலிகமாக மழைநீர் தேங்கிய சாலை சீரமைக்கப் பட்டது.

மேற்படி பணிகளை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன், 16 வது வட்ட செயலாளர் இ.கண்ணப்பன், மாவட்ட பிரதிநிதி நா. மோகன் குமார் நாகூரார், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எலந்தனூர் வி. சிவபிரகாஷ், பாக முகவர்கள் தமிழ்ச்செல்வன், எம். கிருபாகரன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்து பொதுமக்கள் மற்றும் அதிகாரிகளுக்கு உதவி செய்து பணிகளை துரிதப்படுத்தி தற்காலிக தீர்வு கண்டனர்.

புகார் தெரிவித்த உடன் உடனடியாக சம்பவ இடத்திற்கு வருகை தந்து மழை நீரை அகற்றி சாலையை தற்காலிகமாக சீரமைத்து கொடுத்த தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் மற்றும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் தலைமையிலான எல்லோருக்கும் எல்லாமுமான திராவிடம் மாடல் அரசின், சென்னை மாநகராட்சி அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும், கன்னியம்மன் பேட்டை கிராம பொதுமக்கள் தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்.



ஈரோடு மாநகராட்சி மண்டலம் – 4ல் சரவண மஹால், சோலார் பகுதியில் நேற்று (02.09.2025) ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாமை ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் திறந்து வைத்தார். உடன் கழக முன்னணியினர், நிர்வாகிகள் உள்ளனர்.

# சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம்

## இன்று 9 வார்டுகளில் நடைபெறுகிறது!

சென்னை,செப்.3-

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் இன்று (03.09.2025) மணலி மண்டலம்(மண்டலம்-2), வார்டு-20ல் சந்தான கிருஷ்ணன் தெருவில் உள்ள வ.உ.சி. மைதானம், இராயபுரம் மண்டலம் (மண்டலம்-5), வார்டு-55ல் ஏழுகிணறு, புனித சேவியர் தெருவில் உள்ள மாநகராட்சி சமுதாயக் கூடம், திரு.வி.க.நகர் மண்டலம்(மண்டலம்-6), வார்டு-76ல் பட்டாளம், ஸ்டாரன்ஸ் சாலையில் உள்ள மண்டலம் 6 அலுவலகம், அண்ணா நகர் மண்டலம் (மண்டலம்-8), வார்டு-101ல் ஷெனாய் நகர், ஏ-பிளாக் 12வது தெருவில் உள்ள அம்மா அரங்கம், தேனாம்பேட்டை மண்டலம்(மண்டலம்-9), வார்டு-125ல் மயிலாப்பூர், சாந்தோம் நெடுஞ்சாலையில் உள்ள சந்தோம் மேல்நிலைப்பள்ளி உள்ளரங்கம், கோடம்பாக்கம் மண்டலம் (மண்டலம்-10), வார்டு-140ல் மேற்கு மாம்பலம், நாகரத்தினம்மாள் காலனியில் உள்ள எஸ்.வி. நாகரத்தினம்மாள் திருமண மண்டபம், வளசரவாக்கம் மண்டலம் (மண்டலம்-11), வார்டு-145ல் நெற்குன்றம், பி.எச். சாலையில் உள்ள வெங்காய மண்டி மைதானம், ஆலந்தூர் மண்டலம் (மண்டலம்-12), வார்டு-156ல் முகலிவாக்கம், பிருந்தாவன் கார்டன் விரிவில் உள்ள சமுதாயக் கூடம், சோழிங்கநல்லூர் மண்டலம்(மண்டலம்-15), வார்டு-193ல் துரைப்பாக்கம், சி.எல். மேத்தா கல்லூரி ஆகிய 9 வார்டுகளில் நடைபெறவுள்ளது.

இந்த முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும். பொதுமக்கள் தங்கள் வார்டுகளில் நடைபெறும் “உங்களுடன் ஸ்டாலின்” முகாமில் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

# முதல்வரும், கழகத் தலைவரும்!



**மு**தலீடுகளை ஈர்த்து வருகிறார் முதல்வர் !

பெரியாரின் படத்தை முதலீடாய்க்
கொடுத்து வருகிறார் கழகத் தலைவர் !

பொருளாதாரத்தைப்
பெருக்கி வருகிறார் முதல்வர் !

தமிழ்நாட்டில் பெரியாரே
பொருளும் ஆதாரமும் என்பதை
உணர்த்தி வருகிறார் கழகத் தலைவர் !

இன்றைய தலைமுறையை
வளர்த்து வருகிறார் முதல்வர் !

நாளைய தலைமுறைகளுக்கும்
விதைத்து வருகிறார்
கழகத் தலைவர் !



பேரோசிரியர்
**சுப.வீரபாண்டியன்**